# ஒளிமய தூல உடலையளிக்கும்
# பூரண மந்திரங்கள்

டி. ஆர். துளசிராம்
அரவிந்த ஆசிரமம்

வெளியீடு :

அருளாட்சி

அமிர்த நிலையம் :: குறிஞ்சிப்பாடி - 607302

தெ. ஆ. மாவட்டம்.

ஆதாரம் :

"அருட்பெருஞ்ஜோதி அண்டு டெத்லெஸ் பாடி" என்னும் ஆங்கில நூல் : இரு பகுதிகள் — சென்னைப் பல்கலைக் கழக வெளியீடு.

நூல்கள் கிடைக்கும் இடங்கள் :

1. நூல் விற்பனைப் பகுதி,
   சென்னைப் பல்கலைக் கழகம்,
   சென்னை - 5.

2. சப்தா,
   பாண்டிச்சேரி - 2.

பகுதிகள் ஒவ்வொன்றின் விலை : ரூ. 50/-
(அஞ்சல் செலவு தனி)

அச்சிட்டோர் :
ஜெமினி அச்சகம்,
கும்பகோணம்.

# ஒளிமய தூல உடலையளிக்கும் பூரண மந்திரங்கள்.

தூல உடலை தெய்வீகப் பொன்னொளி நிரம்பிய பொன்னுடலாக மாற்றியமைக்க உதவும் அடிப்படையான பூரண மந்திரங்கள் இரண்டு. ஒன்று திருமூலரின் திருமந்திரத்திலுள்ள 912-வது சிவ மந்திரமாகும். மற்றொன்று வள்ளல் பெருமானின் அருட்பெருஞ்ஜோதி மந்திரமாகும். இவ்விரண்டின் அடிப்படையில் மற்றும் சில நாம மந்திரங்கள் அருளால் பூரண மந்திரங்களாக நாம் கிடைக்கப்பெற்று அவற்றையும் ஜபம் செய்துகண்ட உண்மைகளையும் இங்கு குறிப்பிடுகிறோம்.

மந்திரங்கள் நமக்குப் புதிதல்ல. ஆனால் ஒரு மந்திரம் பூரண மந்திரமாக அமைய வேண்டுமெனின், அம்மந்திரம் ஒன்றே நமக்கு எல்லாவித இறையனுபவங்களைக் கொடுக்கக் கூடியதாயிருக்க வேண்டும். அதாவது இதயம் அல்லது நெற்றியின் ஆழத்தில் உயிர் அனுபவம் ( **soul-realisation** அந்தராத்மா அனுபவம் ), தலை உச்சியில் சகஸ்ராரத்தில் (ஏழாவது நிலை) ஆன்ம அனுபவம் (**self-realisation**), உள்ளான்மாவும் உச்சியான்மாவும் (சித்பதமும், தத்பதமும்) சேர்ந்து இணைந்த நிலையில் (**union of soul and self**) பன்னிரண்டு நிலைகளைக் கடந்து பாழ் வெளியும் கடந்து சிதம்பரவெளி (**supermind**) அடைந்து பெறுகின்ற பொற்ஜோதி அருட்ஜோதி ஆகிய ஜோதி அனுபவங்களும் இறைவனின் அனுபவங்களும் முடிவில் மனம், புத்தி, உள்ளம், பிராணன், இந்திரியங்கள், தூல உடல் ஆகியவை ஜோதியால் நிரம்பப்பெற்று அத்தத்துவங்கள் எல்லாம் தெய்விக தத்துவங்களாக மாற்றியமைக்கப்பெற்று (**transformation of nature and body**) காரண, சூக்கும, தூல உடல்கள் மூன்றும் ஜோதியால் முறையே ஞான தேகம், பிரணவ தேகம், சுத்த தேகமாக மாற்றப் பெறுவது ஆகிய அனுபவங்கள் — இவற்றையெல்லாம் அளிக்கக் கூடியது பூரண மந்திரமாகும் (**integral mantra**). இதைத் திருமூலரின் 912வது மந்திரத்திலிருந்து எடுத்த நாம மந்திரத்தால் விளக்குவோம்.

சிவாய நம ஓம் சிவாய நம ஓம்

சிவய நம ஓம் நமசிவாய.

முதல் வரியை ஓதினால் நம் உணர்வு மேலே செல்லும். இரண்டாவது வரியிலுள்ள "சிவயநம ஓம்" ஓதினால் உணர்வு உள்முகமாக ஆழத்தில் செல்லும். முடிவில் "நமசிவாய" ஓதினால் உணர்வு கீழ் முகமாக இறங்கும். ஆகவே மேல்—உள்—கீழ், மூன்றையும் உணர்வால் இணைக்கும் மந்திரம்தான் பூரண மந்திரமாகும். மேற்சொன்னவாறு சிவ மந்திரத்தை நாம் ஓதுவதில்லை. தனியாக "சிவாயநம ஓம்" என்றாவது, தனியாக 'ஓம் நமசிவாய" என்றாவது நாம் ஓதுவதால் மேற்சொன்னவாறு பூரணப்பயனை அதாவது உடலையும் இறைமய தூல ஒளியுடலாக மாற்றியமைக்கும் முடிந்த நிலையை நாம் அடைவதில்லை.

மேற்சொன்ன திருமூலரின் 912வது மந்திரத்தை அதன் முழு வடிவில் இங்கே தருகிறோம்.

கூத்தே சிவாய நம மசி வாயிடும்
கூத்தே – ஈ – ஊ – ஆ – ஏ – ஓம் – சிவாய நம வாயிடும்
கூத்தே – ஈ – ஊ – ஆ – ஏ – ஓம் – சிவய நம வாயிடும்
கூத்தே – இ – ஊ – ஆ – ஏ – ஓம் – நமசிவாய கோள் ஒன்றுமாறே.

இதன் கருத்து : இறைவனின் அம்பலக் கூத்தே (**Dance of Truth-vibration**) பீஜமந்திரமாகவும் (ஈ – ஊ – ஆ – ஏ – ஓம்) நாம மந்திரமாகவும் (சிவாய நம சிவயநம நமசிவாய) ஒலி வடிவில் பரிணமிக்கிறது. சிவாய நம என்று ஆரம்பித்த கூத்து சிவய நமவாக மாறி, முடிவில் நமசிவாய ஆகிவிடுகிறது இம்மாற்றத்தை ஜாடையாகத் தெரிவிப்பது "மசி வாயிடும்" என்னும் சொல். முடிவில் "நமசிவாய" என்று மாறிய இறைக் கூத்தின் உணர்வு வேகம் கீழ் முகமாக இறங்கி (**Descent of Divine Consciousness**) நம் ஜட பூமியிலும் நம் தூல உடலிலும் (கோள்) பாய்ந்து ஒன்றி விடுகிறது. "இருதயந்தன்னில் எழுந்த பிராணன் கரசரணதி சலக்கும்படியே...... கூத்து உகந்தானே" — மந் 2761.

நாம் ஓதுவதற்குச் சௌகரியமாக மூன்று வகையாக இம்மந்திரத்தை ஓதலாம். ஒன்று பீஜ மந்திரமும் நாம மந்திரமும் இணைந்த பூரண மந்திரமாகும். மற்றொன்று நாம மந்திரமே பூரண மந்திரமாக அமையப் பெற்றது. மூன்றாவது பீஜ மந்திரமே பூரண மந்திரமாக அமைந்துள்ளது. இவற்றைக் கீழே தருகிறோம்.

1. கூத்தே சிவாய நம
கூத்தே – ஈ – ஊ – ஆ – ஏ – ஓம் – சிவாய நம
கூத்தே – ஈ – ஊ – ஆ – ஏ – ஓம் – சிவய நம
கூத்தே – இ – ஊ – ஆ – ஏ – ஓம் – நமசிவாய.

2. சிவாய நம ஓம் சிவாய நம ஓம்
சிவய நம ஓம் நமசிவாய.

3. கூத்தே – ஈ – ஊ – ஆ – ஏ – ஓம்
கூத்தே – ஈ – ஊ – ஆ – ஏ – ஓம்
கூத்தே – இ – ஊ – ஆ – ஏ – ஓம்.

உயிரெழுத்துக்களாலான பீஜமந்திரத்தின் உண்மையை திருமூலர் 910-வது மந்திரத்தில் விளக்குகிறார். இதை ஓதிக் கவனிப்போம்.

ஆனந்தம் ஆனந்தம் ஒன்று என்று அறைந்திட
ஆனந்தம் ஆனந்தம் – ஆ – ஈ – ஊ – ஏ – ஓம் என்று ஐந்து இடம்
ஆனந்தம் ஆனந்தம் அஞ்சுமதாயிடும்
ஆனந்தம் ஆனந்தம் – அம் – ஹ்ரீம் – அம் – க்ஷம் – அம் ஆகுமே.

[ அறைந்திட = சொல்லிட ; அஞ்சுமதாயிடும் — ஐந்தையும் இணைக்கும் ]

நெடில் உயிர் எழுத்துக்களான ஆ – ஈ – ஊ – ஏ – ஓ மெதுவாகப் பலமுறை ஓதினால், முறையே மூலாதாரம் – நாபி – இதயம் அல்லது உள்ளம் – கழுத்து – நெற்றி ஆகிய ஐந்து இடங்களிலுள்ள உணர்வு மையங்களை (சக்கரங்களை) விழிப்புறச் செய்து திறக்கும் **(opening of centres).** உதாரணமாக, “ஊ” என்று பலமுறை சொன்னால் நம் இதயத்தில் உணர்வு கூடி அங்குள்ள சக்கரத்தைத் திறக்கும். ஓ என்று ஓதினால் நெற்றிக் கண் திறக்கும் “ஓ” வுடன் “ம்” சேர்த்து ஓம் எனச் சொன்னால் அல்லது இன்னும் சிறப்பாக அதை ஓ … ம் … என நீட்டிச்சொன்னால் அவ்வொலி நம் ஆக்ஞா சக்கரத்தை (நெற்றிக் கண்) தொட்டு விட்டுத் தலை உச்சியிலுள்ள சகஸ்ரார சக்கரத்தைப் பிடிக்கும். பின்பு அவ்வொலியுணர்வு கீழேயுள்ள மூலாதாரத்தை முட்டிவிட்டு ஆரம்பித்த இடமாகிய நெற்றிக்குத் திரும்பி வந்து சேரும். “ம்” சேர்ப்பதால் ஏற்படும் ஒலியுணர்வை மேலும் கீழும் செலுத்தி அவற்றை இணைக்க உதவும். ஒருவாறு ஐந்து சக்கரங்களையும் இணைக்கும். இம்முறையில் கடைசி வரியிலுள்ள ஐந்து பீஜ எழுத்துக்களிலும் “ம்” சேர்க்கப்பட்டுள்ளது. அம் – ஹ்ரீம் – அம் – க்ஷம் – ஆம், முறையே மூலாதாரம் – நாபி – இதயம் – கழுத்து – சகஸ்ராரம் இவற்றை இணைக்கும். அம் என்று சொல்லும்போது “அ” வால் மூலாதாரத்தையும் “ம்” ஆல் சகஸ்ராரத்தையும் உணர்வு தொட்டுப் பின்பு மூலாதாரத் திற்கே திரும்பி வந்து சேரும். இது போன்று “ஹ்ரீம்” என்று சொல்லும்போது “ஹ்ரீ” வால் நாபியையும் “ம்” ஆல் சகஸ்ராரத்தையும் உணர்வு தொட்டுப் பின்பு மூலாதாரத்தில் முட்டி முடிவில் ஆரம்பித்த இடமாகிய நாபிக்கே திரும்பி வந்து சேரும். இகாரமும் ஈகாரமும் சேர்ந்த “ஹ்ரீம்” தூல சூட்சும உடல்களை இணைக்கும். இரண்டாவது வரியிலுள்ள ஆ – ஈ – ஊ – ஏ – ஓ என்னும் நெடில் உயிர் எழுத்துக்களுக்குப் பதிலாக அ – இ – உ – எ – ஒ என்னும் குறில் உயிர் எழுத்துக்களைச் சொல்லும்போது உணர்வு அதே சக்கரங்களைத் தனித்தனியாகப் பிடிக்கும். ஆனால் உள்முகமாக ஆழத்திற்குச் செல்லும். கடைசி வரியிலுள்ள பீஜ மந்திரங்களுக்குப் பதிலாக அம் – இம் – உம் – எம் – ஒம் எனச் சொன்னாலும் ஒவ்வொரு சக்கரத்தை சகஸ்ராரத்துடன் இணைத்து அதன் மூலமாக ஐந்து சக்கரங்களையும் இணைக்கும் **(interlinking of centres).** அதே போன்று ஆம் – ஈம் – ஊம் – ஏம் – ஓம் எனச் சொன்னாலும் அதே பயனைத் தரும்.

இப்போது முதலில் கூறிய 912 வது மந்திரத்திற்கு வருவோம். இதில் ஆ–ஈ–ஊ–ஏ–ஓம் என்பதற்குப் பதிலாக ஈ–ஊ–ஆ–ஏ–ஓம் என முறைமாற்றிக் கொடுக்கப்பட்டுள்ளது பீஜ எழுத்துக்களை இவ்விதமாக ஓதினால் நம் உணர்வுமையங்களாகிய சக்கரங்கள் விழிப் புற்றுத் திறந்து கொள்வதுமன்றி **(opening of chakras)** அவைகள் ஒவ்வொன்றும் மற்றவற் றுடன் இணையப்பெறுகின்றன **(interlinking of chakras).** இதனினும் முக்கியமாக, சிறப் பாக, அது மூன்று உடல்களையும் இணைத்துவிடுகிறது. காரண, சூட்சும, தூல உடல்கள் மூன்றையும் இணைப்பதால் **(integration of three bodies)** அவற்றை நாம் நம்முள் கண்டு உணர ஆரம்பிக்கிறோம். இம் மூன்று உடல்களின் இணைப்பால் இறைவனின் சிதம்பர வெளியுடன் **(supermind)** இறைக் கூத்துடன் **(Dance or Truth-vibration)** இரகசியமாக தெரிந்தோ தெரியாமலோ நாம் தொடர்புகொள்ளுகிறோம். ஆகவே “கூத்தே சிவாய நம…” என்னும் 912 வது திருமந்திரம் மிகவும் சிறப்பானது. மிகவும் இரகசியமான பூரண மந்திர மாகும். உடலையும் பொன்னுடலாக்கும் பரிசவேதியாகும். இதுபோன்றதொரு மந்திரம் வேதத்திலும் உபநிஷதங்களிலும் இல்லை எனச் சொல்லலாம். ஆகவே இம்மந்திரத்தை எல்லா வயதினர்களும் சாதகர்களும் ஓதிப் பயன்பெறலாம். பூரண மந்திரமாதலால் இல்லறத்தார் களும் ஓதி இல்வாழ்விலும் இறைவனை நாடி முழுப் பயனைப் பெறலாம் என்பது கண்கூடு.

திருமூலரின் "கூத்தே சிவாய நம..." என்னும் மந்திரம்போன்று பூரண மந்திரமாக அமையப்பெற்றது வள்ளல் பெருமானின் "அருட்பெருஞ்ஜோதி" மந்திரமாகும். இதன் சிறப்பியல்பைக் கடைசியில் எடுத்துக் கூறுகிறோம். இவ்விரண்டு பூரண மந்திரங்களின் அடிப்படையில் எழுந்து அமைந்து நல்லருளால் நாம் கிடைக்கப்பெற்ற சில மந்திரங்களையும் இங்கே தருகிறோம். அவையும் திருமூலரின் சிவ மந்திரம் போன்று எல்லா இறை அனுபவங்களைத் தரக் கூடியன. ஸ்ரீ அரவிந்த ஆசிரமத்திலுள்ள கங்காதர சுவாமி இம்மந்திரங்களை எல்லாம் ஒவ்வொரு நாள் தனித்தனியாக ஓதிப் பெற்ற அனுபவத்தை இங்கே கூறுகிறோம்.

இம் மந்திரங்களில் வரும் பெயர்கள் — அதாவது சிவ நாமம், ராம நாமம், கிருஷ்ண நாமம், அன்னை நாமம் என்னும் அவதாரங்களின் நாமம் எல்லாச் சமயங்களையும் மதங்களையும் கடந்த ஒரே பேராண்டவரை, அம்மையப்பனாகிய பேராண்டவரை சிவ சக்தியாகிய பேராண்டவரைக் குறிக்கும் என்க. இரண்டு வரிகளைக் கொண்ட இந்நாம மந்திரம் ஓதும்போது, முதல்வரி ஓதும்போது நம்முணர்வு மேலேறுவதும், இரண்டாம் வரியின் முதற்பாதியை ஓதியபோது உணர்வு உள்முகமாகச் செல்லுவதும், கடைசிப்பாதியை ஓதிய போது அது கீழ்முகமாக இறங்குவதும் தெரியக்கூடும். தவிர, "ஸ்ரீ" உணர்வை மேலேற்றும். "ஸ்ரி" உள்முகப்படுத்தும்; "ஜய் ராம்" மேலேற்றும்; "ஜய் ராம" உள்முகப்படுத்தும்; "ஜய ராம" கீழ் முகமாக உணர்வை இறங்கச் செய்யும. "ஓம்" சந்தர்ப்பத்திற்கு ஏற்ப முன்வரும் சொற் தொடர்களின் ஒலி இசைவுப்படி, மேலாவது உள்முகமாவது, கீழ்முகமாவது உணர்வைச் செலுத்தும். எனினும் மந்திரம் தொடர்ந்து ஓதும்போது இம்மாற்றங்களைக் கவனிக்க வேண்டியதில்லை. ஏகாக்கர மனதுடன் இருந்து ஓதும்போதே அதை மனதில் கேட்டவண்ணமாயிருந்து ஆண்டவரை அன்புடனும் மகிழ்வுடனும் நினைக்க வேண்டும். அப்போது, ஓதும்போதே தியானம் இதயத்திலாவது நெற்றி மத்தியிலாவது தலை உச்சியிலாவது அல்லது குறிப்பிட்ட இடத்திலன்றிப் பொது வாகப் பரவலாகத் தியானம் கூடலாம். ஓதுவதை நிறுத்தியதும் தியானம் மிகத் தீவிர மாய்ச் செறிவுடன் பலப்பட்டு ஆழத்தில் செல்வதைக் கவனிக்கலாம்.

1. ஸ்ரீ .. ராம் ஜய்ராம் ... ஜய் ஜய் ராம ஓ ... ம் ...
   ஸ்ரி ராம ஜய் ராம ... ஜய ஜய ராம ஓ ... ம் ...

2. ஸ்ரீ ... மா ஜய் மா ... ஜய் ஜய் மா ஓ ... ம் ...
   ஸ்ரிமயி ஜய்மயி ... ஜய ஜய மா ஓ ... ம் ...

3. ஸ்ரீ ... கிருஷ்ண ஸ்ரீ ... கிருஷ்ண கிருஷ்ணய நம ஓ ... ம் ..
   ஹரி கிருஷ்ண ஹரி கிருஷ்ண ... கிருஷ்ண கிருஷ்ண நம ஓ ..

4. ஸ்ரீ ... அரவிந்த ஸ்ரீ ... அரவிந்த அரவிந்தாய நம ஓ ... ம் ..
   ஸ்ரி அரவிந்த ஸ்ரி அரவிந்த ... மிர்ர அரவிந்த நம ஓ ... ம் ...

திருமூலரின் சிவ மந்திரமும், மேற்குறித்த முதல் மூன்று மந்திரங்களும் (ராம மந்திரம், மா மந்திரம், கிருஷ்ண மந்திரம்) தனித்தனியாக வெவ்வேறு நாளில் ஜபம் செய்தபோது கங்காதர சுவாமிக்கு ஒரே மாதிரியான அனுபவம் ஏற்பட்டது. அது கீழ் வருமாறு. சிவ மந்திரம் ஓதும்போது திருமூலரும், ராம மந்திரத்தின்போது மங்களூருக்கு அருகிலுள்ள காஞ்சங்காடு ஆனந்தாசிரம ஸ்தாபகரான ராம்தாஸ் சுவாமியும், "மா" மந்திரத்தின் போது ஸ்ரீ அரவிந்த ஆசிரம அன்னையும், கிருஷ்ண மந்திரத்தின்போது ஸ்ரீ கிருஷ்ணரும்

சிறிதுநேரம் தோன்றிக் காட்சி தந்தனர். மந்திரத்தை சுமார் ஒரு மணி நேரத்தில் — பாதி நேரம் நாவாலும் பின்பு மனதாலும் — ஓதி முடித்ததும், பேரமைதியும் தெய்வீக ஒளியும் அவரைச் சூழ்ந்தன. ஓங்கார நாதமும் கேட்டது. அவருடைய மூன்று உடல்கள், சிரசு முதல் பாதம் வரை இணைந்தன. தூல உடலின் தூலமான சத்து ஒரு வடிவம் தாங்கி, வெண்ணிறமான தம் சூட்சும உடலுடன் சேர்ந்தது பின் அச்சூட்சும உடலும் உள்ளுயிரின் ஒளிமயமான காரண உடலுடன் (**luminous body**) சேர்ந்தது. பின்பு அவருடைய அந்தராத்மா (**soul**) ஆன்மாவுடன் (**self**) இணைந்து மூவுடல்களின் இணைப்பைத் தாங்கியவாறு மேல் எழும்பியது. மூவுடல்களும் இணைந்தவாறே மேல்ஏறின. இவ்வாறு தலைக்குமேல் படிப் படியாக உள்ள பல ஆன்மவுணர்வு மயமான உலகுகளுக்கு ஏறி, பின்பு பாழ்வெளியைக் கடந்து பதின்மூன்றாவது நிலை முதலாகத் தொடங்கும். ஞானப் பெருவெளியாம் சிதம்பர வெளியை (**Supermind or Truth-world**) கங்காதரசுவாமி அடைந்தார். அவ்வெளியின் உயர்நிலையில் தூய வெண்மையான அருட்ஜோதி அவரைச் சூழ்ந்தது. பின்பு, சற்றே இறங்கிவந்து ஞானப் பொற் ஜோதி விளங்கும் பொன்னம்பலத்தில் (**Golden Truth-world**) புகுந்தார். அதன் ஒரு கீழ்நிலையில் அதாவது பதின்மூன்றாவது நிலையில் சிவனும் சக்தியும் இன்பமும் ஒளியும் நிறைந்த சுத்தத் திருமேனிகளைக் கொண்டு (**luminous and blissful Truth-physical Bodies**) நடனமாடுவதைக் கண்டார் சிவனும் சக்தியும் உடலுற இணைந்து நடனமாடியவாறே சுற்றிச்சுற்றி வலம் வருவதையும் பார்த்தார் (**circumgyrating dance in bodily union**). பின்பு கங்காதர சுவாமி சிதம்பர வெளியைவிட்டு இறங்கி இப்பூவுலகுக்குத் திரும்பினர். மூன்று தேகம் அவருடைய ஆதாரத்தில் இறங்கும் சமயம், அவை சற்றே தனித்தனியாகப் பிரிந்து நின்றன. முதலில் தூல சத்து உரு அவருடைய உடலில் இறங்கிற்று. அப்போது அவருடைய தூல உடலில் எல்லா திசுக்களிலும் தாது அணுக்களிலும் (**cells of his body**) செம்பொன்னொளி (**Golden Red Light**) பாய்ந்து நிரம்பிற்று. இது உடலை ஒளிமயமான தூல உடலாக மாற்றும் சக்தி வாய்ந்தது. பின்பு, சூட்சும உடல் அவருடைய ஆதாரத்தில் இறங்கியது. அத்துடன் காரண உடலும் பிரவேசித்தது. அது சமயம் அவருடைய குடி முழுதும் அதாவது முழு ஆதாரத்திலும் (மனம், உள்ளம், பிராணன், இந்திரியங்கள், தூல தேகம் ஆகியவை) பொன்னொளி படர்ந்து நிரம்பிற்று. அவர் இருந்த அறையிலும் தெய்வீகப் பொன்னொளி நிரம்பியது.

கிருஷ்ண மந்திரம் எடுத்து ஓதிய நாளன்று, கங்காதர சுவாமிக்கு வெளிர் நீல நிற ஒளியுடன் (**light blue light**) கிருஷ்ண பரமாத்மா தோன்றி அர்ஜுனனுக்கு யுத்த களத்தில் உபதேசம் செய்யும் காட்சியைத் தந்தார். அக்காட்சி சிறிது நேரத்தில் மறைந்ததும், ஸ்ரீ அரவிந்தரும் அன்னையும் காட்சி தந்தனர். கங்காதரர் சிதம்பர வெளிக்கு ஏற உதவினர். அவ்வெளியை மறைத்துத் தடையாக நின்ற பெரும் பொன்முகட்டை (**golden dome**) அன்னை ஒரு பொன் சம்மட்டியால் தகர்த்து, கங்காதரர் மேல்ஏற வழிசெய்து கொடுத்ததைக் கண்டார். அப்போது சிதம்பரப் பொன்னொளி வெள்ளம் (**Supramental Golden Light**) பூமிக்கு எங்கும் பரவலாகப் பாய்ந்து இறங்கிற்று. கங்காதரனின் மூவுடலிலும் அவ்வொளி புகுந்தது. ஆனால் அவரோ சிதம்பர வெளிக்குள் ஏறிப் புகுந்தார். பின்பு முன் கூறியவாறு சிவசக்தி நடனம் கண்டு இப்புவி நிலைக்குத் திரும்பி வந்தார்.

இன்னொரு நாள் கீழ்கண்ட ஸ்ரீ அரவிந்தர் மந்திரம் ஓதினர்.

4. ஸ்ரீ ... அரவிந்த ஸ்ரீ ... அரவிந்த அரவிந்தாய நம ஓ ... ம் ...
ஸ்ரி அரவிந்த ஸ்ரி அரவிந்த ... மிர்ர அரவிந்த நம ஓ ... ம் ...

இப்பூரண மந்திரத்தின் பயனாக கங்காதரசுவாமி ஒளியாலும் ஓங்கார நாதத்தாலும் சூழப்பெற்று தன் ஆதாரத்தின் எல்லா சக்கரங்களும் விழிப்புற்று மலர்ச்சியடையப் பெற்றார். ஸ்ரீ அரவிந்தரும் அன்னையும் சற்றுநேரம் அவருக்குக் காட்சி தந்தருளினர். உள்ளத்தின் ஆழத்தில் அந்தராத்ம (உயிர்) உணர்வு மலர்ந்து எழுந்து (**soul-consciousness**) தன் ஆன்மா (**self**) வுடன் இணைந்து சிதம்பர வெளிக்கு ஏறினார். எங்கும் ஆண்டவரின் சாந்நித்தியம் (**Divine Presence**) உணர்ந்தார். ஏறும் எல்லா நிலைகளிலும் ஞானப் பொன்னொளி மேலிருந்து இறங்கி வந்து எங்கும் பரவுவதைக் கண்டார். ஞானப் பெருவெளி யடைந்து அதன் உயர் உச்சிநிலையில் (திருச்சிற்றம்பலத்தில், **Summit Supermind**) அவர் தூய வெண்மையான அருட் பெருஞ் ஜோதியைக்கண்டு அனுபவித்தார். அஜ்ஜோதியுடன் ஒன்றியபோது, அமர ஒலியொன்றைக் கேட்டுக் கண் திறந்தார். எனினும் இவ்வனுபவத்தின் உணர்வு அலைகள் அவருக்கு வெகுநேரம் இன்பமளித்துக் கொண்டிருந்தது. இதைத் தூல உடலிலும் உணர்ந்தார்.

கடைசியாக ஒரு நாள் கங்காதரசுவாமி அருட்பெருஞ் ஜோதி மந்திரம் ஓதினார். இதுவரை கண்டு அறியாத பூரணமான பேரனுபவம் அவருக்கு ஏற்பட்டது.

அருட் பெருஞ்ஜோதி ... அருட் பெருஞ்ஜோதி
தனிப் பெருங்கருணை ... அருட் பெருஞ்ஜோதி

எல்லோர் மனதைக் கவர்ந்து சமய மத பேதமின்றி உலகம் ஒப்புக் கொள்ளக்கூடிய பூரண மந்திரம் அருட்பெருஞ் ஜோதி நாம மந்திரமாகும் அருட்பெருஞ் ஜோதியிலிருந்து பிரிக்க முடியாதவாறு ஆண்டவர் இணைந்து ஒன்றியுள்ளார். இம்மகாமந்திரத்தால் அருட் பெருஞ்ஜோதி அனுபவம் ஏற்பட்டு ஆண்டவருடன் ஒன்றிய நிலையில், கங்காதரருக்கு சிதம்பர வெளியும் விஸ்வப் பிரபஞ்சமும் அசேதனமான பேரிருட்டுப் பெருநிலமும் (**nether-realm of Inconscient Darkness**) இணைந்த பேரனுபவத்தைப் பெற்றார். இதை விளக்குவோம்.

முதலில் ஜோதி மந்திரம் ஓதியதும் வள்ளல் பெருமான் சிறிது நேரம் கங்காதர சுவாமிக்குக் காட்சி தந்து அருளினார். தூய வெண்ணொளியாம் அருட்ஜோதியும் ஓங்கார நாதமும் அவரைச் சூழ்ந்தன. உள்ளான்ம உணர்வு (**soul-consciousness**) ஆன்மாவுடன் (**self**) இணையப்பெற்று அவர் சிதம்பர வெளிக்கு ஏறினார். வழியெங்கும் தூய வெண்ணொளியாம் அருட்ஜோதியைக் கண்டார். பதின்மூன்றாவது நிலையில் சிதம்பரவெளியின் பொன்னம்பலத்தில் புகுந்தார். பின் அவ்வெளியின் உச்சநிலையான திருச்சிற்றம்பலத்தை (பதினாறாவது நிலை) அடைந்தார். இங்கு "அருட்பெருஞ்ஜோதி" கண்டு ஆண்டவருடன் ஒன்றானார். விஸ்வப் பிரபஞ்ச இயக்கம் முழுதும் தனிப்பெருங் கருணையின் விளக்கமாக விளங்கக் கண்டார். பின் அருட்சக்தியின் துணையால் அவ்வெளியின் நடுநிலையான பொன்னம்பலத்தில் (14-15 நிலை) பிரவேசித்து உரு அருவான சிவசக்தி சொரூப நடனத்தைக் கண்டார். ஏறியவாறே இறங்கிப் பலப்பல கீழ்நிலைகளைக் கடந்து இறங்கி வந்து முடிவில் இப்பூமிக்கு வந்தபோது உலகு முழுதும் செம்பொன்னொளியால் நிரம்பியிருக்கக் கண்டார்.

அவருடைய உள்ளுயிர் உணர்வு (**soul-consciousness**) தன் ஆதாரத்தின் நுழை வாயிலான பிரம்மரந்திரத்தின் வழியாகப் புகுந்தது. அவ்வாறு புகுந்தருணம் "செம் பொன்னொளி" தூல உடல் முழுதும் பாய்ந்து எல்லா தாது அணுக்களிலும் (**cells of the**

**body)** நிரம்பியது. பின்பு, ஆதாரம் முழுதும் (குடி முழுதும்) பொன்னொளி புகுந்து நிரம்பியது. தூல உடலும் செம்பொன்னொளி மயமாக மிளிர்ந்தது. மயிர்க்கால்தோறும் அவ்வொளி பிரகாசித்தது. சொல்லொணாத பேரின்பக் களிப்பு உள்ளத்தின் ஆழத்தில் ஓங்கித் திகழ்ந்தது. பிறகு அப்பொன்னொளி மகா பாச அந்தகாரம் என்றும் இருவெளி என்றும் சொல்லப்படுகிற பேரிருட்டுப் பெரு நிலத்திலும் **(Inconscient Darkness)** பாய்ந்து ஊடுருவி அதைப் பொன்னொளி மயமாகப் பிரகாசிக்கச் செய்தது. முடிவில் வெண்மையான தூய அருட்பெருஞ் ஜோதியால் அது நிரம்பியது. ஒளியும் சேதன உணர்வும் கொண்ட சிற்றணுக்கள் **(luminous and conscious micro-atomic particles)** அங்கு நிரம்பி யிருந்ததையும் கண்டார். இவ்வணுத்துகள்களை ஏற்கனவே முன்பு ஒரு தடவை பார்த்திருந் ததாக உணர்ந்தார் — அதாவது 1978ம் ஆண்டில் தன் அகக் காட்சியில் வந்த வள்ளல் பெருமான் தம் இறவா உடலைக் கரைத்து மறைந்ததையும் அப்போது அவ்வுடலின் தாதுப் பொருள்களெல்லாம் இறைமயமான ஒளியுடனும் சேதன உணர்வுடனும் கொண்ட சிற்றணுக் களாக மாறியதையும் காட்சியாகப் பார்த்திருந்தது இப்போது கங்காதரருக்கு ஞாபகம் வந்தது. ஆம், அதே ஒளியுணர்வான இறைமயமான சிற்றணுப் பொருள்கள்.

பிறகு, அருட்பெருஞ்ஜோதியால் சற்று நேரம் நிறைந்து காணப்பட்ட அப்பேரிருள் வெளியில் பேராண்டவரே குடிகொண்டு அன்பும் அருளும் கருணையும் விளங்க விளக்குவதை யும் உணர்ந்தார். அருட்பெருஞ்ஜோதிப் பேராண்டவரே இப்பேரிருள் அசேதன வெளியாக ஆகி நம் உலக வாழ்வை மெதுவாக படிப்படியாக பரிணமக் கிரமமாக மலர்ச்சியுறச் செய்து **(evolution of the earthly life)** முடிவில் தெய்வீக வாழ்வாக மாற்றவும் செய்வார் **(collective evolution into a divine life)** என்பதை யுணர்ந்தார். பிறகு இதுவரை கேட்டறியாத இன்ப அருள் ஒலியைக் கங்காதர சுவாமி கேட்டார். அத்துடன் அருள் மணமும் கமழ்ந்தது. இரண்டு மணி நேரம் அற்புதமான தொடர் அனுபவங்களைப் பெற்ற பின் கண்திறந்தார். பேராண்டவரின் சாந்நித்தியமும் அருட்ஜோதியின் அலைகளும் உடல் முழுதும் எல்லாத் தாதுக்களிலும் நிரம்பப் பெற்று பலமணி நேரம் அந்நிலையில் இருந்ததை அவர் திடமாக உணர்ந்தார்.

பேராண்டவரே சித்சக்தி ஜோதியான அருட்பெருஞ்ஜோதி ஆகி, அதிலிருந்து பிரிக்க முடியாதபடி ஒன்றியுள்ளார். அருட்ஜோதி சிதம்பர வெளியில் வெளிப்படையாக ஆண்டும், நம் புவியிலும், புவி வாழ்விலும், பஞ்ச பூதங்களிலும் மறைமுகமாக இருந்து செயல் படுவதாயும், பேரிருட்டுப் பெருநிலத்தில் அதன் ஆட்சி மறைக்கப்பட்டு செயலற்று உணர்வற்று அசேதனமாக இருப்பதுபோல் இருப்பதாகவும் (நடிப்பதாகவும்) அவர் உணர்ந்தார்.

அருட்பெருஞ் ஜோதி மந்திரம் மேல் – உள் – கீழ் முதலான எல்லா நிலைகளையும் இணைப்பதால் எந்த ஒரு சூழ்நிலையிலும் அதை நினைந்து உணர்வுடனும் நெகிழ்ச்சியுடனும் அல்லது மகிழ்ச்சியுடனும் ஓதினால் இறையருளை நாம் பெறலாம் என்பது கண்கூடு. எல்லா வயதினரும், சாதகர்களும், யுவர்களும், துறவிகளும், இல்லறத்தார்களும், ஆன்ம நாட்டமுடைய எவரும், இறையனுபவத்தில் நிலைத்த பெரியோர்கள் கூட இப்பூரண மந்திரம் ஓதிப் பயன் பெறலாம். உட்கார்ந்த நிலையிலும், நடக்கும்போதும், படுக்கையில் கிடக்கும் போதும்கூட ஓதிப் பயனடைவார்களாக.

மேற்குறித்த பூரண மந்திரங்கள் நமக்கு இறையனுபவங்களோடு தூல உடலையும் ஞானம் நிறைந்த ஒளிமயப் பொன்னுடலாக மாற்றும் சக்தியுள்ளதெனில், அருட்பெருஞ் ஜோதி மந்திரம் இன்னும் சிறப்பாக பொன்னொளி நிரம்பிய இறவாவுடலாக மாற்றும் சக்தி

யுடையது (**transformation of nature and body into their deathless states of perfection**), ஏனெனில் அருட்ஜோதி இருள்நிற யமனின் கோட்டையாகிய பேரிருட்டுப் பெருநிலத்திலும் (இடுவெளி) பாய்ந்து அதனையும் ஒளியுறச் செய்கிறது. கூற்றுவனைத் துரத்தும் அருட்சித் ஜோதியாகும். தவிர, நம் அருட்பிரகாச வள்ளல் பெருமான் இறவா வுடலைப்பெற்று அமரவாழ்வில் நிலைத்தபிறகே, பேராண்டவரிடமிருந்து நேரடியாகப் பெற்ற இம்மகாமந்திரத்தை உடனடியாகத் தம் எல்லா சீடர்களுக்கும் பக்திமான்களுக்கும் துறவற யோகிகளுக்கும் இல்லற யோகிகளுக்கும் பொதுவாக வழங்கினர். ஆகவே அவருடைய ஆசிகளும் இம்மந்திரத்திற்கு உண்டு. பெருமானர் தம் தூய தூல உடலைப் பிறர் கண்ணுக்குத் தெரியாதவாறு கரைத்து எல்லோர் உடம்பிலும் (மனதிலும், உள்ளத்திலும், இந்திரியங் களிலும் பிராண சக்திகளிலும் கூட) புகுந்து கொள்வதற்காகவும் அருட்பெருஞ் ஜோதியை உலகுக்கு நேரிடையாக வெளிப்படையாகக் கொணர்ந்து அதன் ஆட்சியை வெளிப்படுத்தவும் தம்மை இவ்வாறு அர்ப்பணித்துப் பெருந்தியாகம் செய்திருக்கிறர். இம்மகத்தான தியாகத்தை அதன் அருமையையும் பெருமையையும் நற்பயன்களையும் உலகோர் இன்னும் அறியவில்லை. தனிப்பட்ட முறையிலும் பரிணமைக் கூட்டு முறையிலும் (**evolutionary collectivity**) அஞ்ஞானத்திலிருந்து விடுபட்டு இறை இன்ப ஞான வாழ்வில் நாம் வாழ்வதற்காகவும், நமக்கு எல்லாம் ஆன்மநேய ஒருமைப்பாடு ஏற்படவும், ஜாதி சமய மத வேறுபாடுகளற்ற அல்லது வேறுபாடுகளை மனதிற் கொள்ளாத மனித சமுதாயம் ஏற்படவும், மக்கட் திரள்களெல்லாம் மருவிக் கலந்து இணைந்து வாழவும் (**unity of the world and the human race**) வள்ளல் பெருமான் தம் சாகாவுடலைத் தியாகம் செய்துள்ளார்.

வள்ளலார் மறைந்த சில ஆண்டுகளுக்குள்ளாகவே அவர் வாழ்ந்த அதே பகுதிக்கு வந்து தவம் ஆற்றிய ஸ்ரீ அரவிந்தரும் அன்னையும் சிதம்பர ஒளியை (**Supramental Light**) நேரடியாக இவ்வுலகுக்குக் கொண்டுவரும் பெரும் முயற்சியில் அன்னையார் மூலம் 1956ம் வருடம் பிப்ரவரி 29ந்தேதியன்று வெற்றி கண்டனர். அவர்களும் அருட்ஜோதியின் மகிமையை அறிந்திருந்தனர். அன்னை பல நிலைகளில் செயல்படும். அருட்ஜோதியைப் பற்றிக் கூறியுள்ளதைக் கவனிப்போம். அருட்ஜோதிப் பெயர் தாம் மிகவும் விரும்பும் பெயர் என்றும் அஜ்ஜோதி தம் தூல உடலிலும் 1969 வருட முதலாக செயல்படுவதாகவும் தெரிவித்தார். அஜ்ஜோதி தூலமான ஜடத்தில் (**matter and physical body**) இறங்கும் போது அது பொன்னிறமும் ரோஜா நிறமும் கலந்த ஒரு கலப்பு நிறமாக மாறுகிறது. மேல் நிலையில் அருட்ஜோதி உதாரகுணம் கொண்டு ஊடுருவ முடியாத பால் வண்ண வெண்ணிறமாயுள்ளது (**opaque and white like milk**). இஜ்ஜோதி ஒருவனுக்கு ஆபத்திலும் சங்கடங்களிலிருந்து கைதூக்கிக் காப்பாற்றும் சக்தியும், நோயைக் குணப் படுத்தும் ஆற்றலும் கொண்டுள்ளது. எல்லாவற்றிற்கும் மேலான உயர் உச்சி நிலையில் அருட்ஜோதி எதையும் ஊடுருவக்கூடிய நிறமற்ற தூய வெண்ஜோதியாக உள்ளது (**pure and transparent white Light of Grace**). அதன் ஒரு துளி பட்டமாத்திரத்தில் அசுரனும் ஒழிந்துபோவான். இராமலிங்கப் பெருமானுக்கு அருட்ஜோதியால் ஏற்பட்ட உடல் மாற்றங் களைப்பற்றி (**transformation of his body**) 1970ல் அன்னையிடம் தெரிவித்தபோது அன்னை மேற்சொன்ன தம் அனுபவங்களைத் தெரிவித்தார். வாழ்க வள்ளல் பெருமான். வாழ்க ஸ்ரீ அரவிந்தப் பெருந்தகை. வாழ்க அன்னையாம் பராசக்தி. வாழ்க அருட்பெருஞ்ஜோதி.

(இந்த ஆய்வுக் கட்டுரை சென்னைப் பல்கலைக் கழகத்தார் அண்மையில் வெளியிட் டுள்ள "அருட்பெருஞ்ஜோதி அண்டு டெத்லஸ் பாடி" என்னும் இவ்வாசிரியரின் ஆங்கில நூலைத் தழுவி எழுதப் பெற்றது.)